சுருக்கம்

வேளாண்மை–சிறப்பு விருது – நெல் (மானாவாரி) சிறுதானியங்கள், பயறு வகைகள் சாகுபடியில் அதிகமான மகசூல் பெறும் விவசாயிகளுக்கு சிறப்பு விருது வழங்குதல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மைத்(வேஉ 2)துறை

அரசாணை (நிலை) எண்.191 நாள்.5.9.2012

படிக்க:-

வேளாண்மை ஆணையரின் கடித எண்.PM2/55250/2012, நாள் 03.05.2012.

----------

ஆணை:–

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 2012–13–ம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையின்போது கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:-

பல்வேறு பகுதிகளுக்கு உகந்த பயிர்களை கண்டறிவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, உணவு தானியங்களில் அதிக மகசூல் எடுக்கும் விவசாயிகளுக்கு சிறப்பு பரிசு வழங்கப்படும்

2) தமிழ்நாட்டில் அரிசி, சிறுதானியம் மற்றும் பயறு வகைகள் முக்கிய உணவுப் பயிராகும். சிறுதானியங்களுள் சோளம், கேழ்வரகு மற்றும் சாமை ஆகியவை முக்கியத்துவம் வாய்ந்தவை. தமிழ்நாட்டு மக்களின் தினசரி உணவுப் பழக்கங்களில் ஒன்று அல்லது இரண்டு பயறு வகைகள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. துவரை, உளுந்து , பச்சைபயிறு ஆகியன முக்கியமான பயறு வகை பயிர்கள் ஆகும்.

3) 2012–13ல் மொத்த உணவு உற்பத்தி இலக்கு 120 இலட்சம் மெ.டன்னாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த உற்பத்தி இலக்கினை அடைவதற்கு நெல் (மானாவாரி) சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகள் சாகுபடி பரப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. நெல் மானாவாரிப் பயிராக தமிழ்நாட்டில் ஒருசில மாவட்டங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. மானாவாரி நெல்லில் உற்பத்தித் திறன் மிகவும் குறைவாக இருப்பதால், உணவு உற்பத்தி இலக்கினை அடைவதற்கு மானாவாரியில் குறிப்பிடத்தக்க அளவு உற்பத்தியை உயர்த்துவது அவசியமாகும். நவீன தொழில் நுட்பங்களை கடைபிடித்து உற்பத்தித் திறனை அதிகரிக்க விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமாகிறது. நெல், சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகளில் சாகுபடிப் பரப்பை அதிகரிக்கவும் உற்பத்தித் திறனை அதிகரித்து இலக்கிடப்பட்ட உற்பத்தியை அடைய நவீன உத்திகளை கடைபிடித்திட விவசாய சமுதாயத்தினரை ஊக்குவிக்க வேண்டும்.

4) இதனடிப்படையில், மேலே படிக்கப்பட்ட வேளாண்மை ஆணையரின் கருத்துருவில், நெல் (மானாவாரி), சோளம் (மானாவாரி மற்றும் இறவை) கேழ்வரகு (மானாவாரி மற்றும் இறவை),

சாமை (மானாவாரி), துவரை (மானாவாரி மற்றும் இறவை), பச்சைப் பயறு (மானாவாரி மற்றும் இறவை) மற்றும் உளுந்து (மானாவாரி மற்றும் இறவை) சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு சிறப்பு விருதினை வழங்குவதன் மூலம் சாகுபடி பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க இயலும், எனவே நெல் (மானாவாரி), சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகளில் அதிக விளைச்சல் பெறும் விவசாயிகளுக்கு முதல் பரிசாக ரூ.50,000/– இரண்டாம் பரிசாக ரூ.25,000/– மூன்றாம் பரிசாக ரூ.10,000/–மும் வழங்குவதன் மூலம் விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்களைக் கடைபிடிக்க ஊக்குவிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| சிறப்பு விருதிற்கு திட்டமிடப்பட்ட மொத்த ஒதுக்கீடு | = ரூ.10,20,000 |
| பயணப்படிக்கு திட்டமிடப்பட்ட மொத்த ஒதுக்கீடு | = ரூ. 1,20,000 |
| மொத்தம் | = ரூ.11,40,000 |

இந்த விருது வழங்குவதற்கு ரூ.11,40,000/– (ரூபாய் பதினொரு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யவும், இதன் மூலம் தமிழகத்தில் 36 விவசாயிகளுக்கு பரிசுப் பணம் வழங்கவும் வேளாண்மை ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5) <u>சிறப்பு விருதுக்கான விவசாயிகளை தேர்வு செய்வதற்கான வழி முறைகள்:-</u>

1 குறைந்த பட்சம் 50 சென்ட் நிலம் அறுவடை செய்யப்பட வேண்டும்.

2 நில உரிமையாளர்கள் மற்றும் குத்தகைதாரர்களும் கலந்து கொள்ள தகுதியுடையவர்கள்.

3 இப்போட்டியில் பங்கு பெற விரும்பும் விவசாயிகள் ரூ.150/– பதிவுக்கட்டணமாக செலுத்த வேண்டும்.

4 சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர இதர மாவட்டங்களில் உள்ள அனைத்து விவசாயிகளும் கலந்துகொள்ள தகுதியுடையவர்கள்

5 போட்டியில் கலந்துகொள்பவர்கள் இணைப்பில் உள்ள, உரிய படிவத்தினை பூர்த்தி செய்து பதிவுக் கட்டணத்துடன் சம்மந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குநரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

6 பதிவு கட்டணத்திற்கான ரசீது விவசாயிகளுக்கு கொடுக்கப்பட வேண்டும்.

7 போட்டியில் கலந்து கொள்ளும் விவசாயிகளிடமிருந்து பதிவு கட்டணம் கீழ்க்கண்ட வரவின தலைப்பில் வரவு வைக்கப்பட வேண்டும்.

0401–00–பயிர் வளர்ப்பு –800 – இதர வரவினம் – AJ – பயிர் விளைச்சல்போட்டி (த.தொ.கு 0401–00–800 AJ –009)

8 மாநில அளவு போட்டிக்கான கடைசி தேதி அந்த நிதியாண்டில் 31 மார்ச்

9 போட்டியில் கலந்து கொள்பவர் அறுவடை செய்யும் தேதியை 15 நாட்களுக்கு முன்பு சம்மந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குநர்களுக்கு நேரிலோ அல்லது பதிவு தபாலிலோ அனுப்பி அதற்கான ஒப்புதலைப் பெற்றுக் கொள்ள வேண்டும் இல்லாவிட்டால் விவசாயிகள் கோரிக்கை ஏற்றுக் கொள்ளபட மாட்டாது.

10 பதிவுக் கட்டணம் எந்த சூழ்நிலையிலும் திருப்பி தரப்படமாட்டாது.

11 மாவட்ட வேளாண் இணை இயக்குநர்கள் அறுவடை தேதி முடிவு செய்து வேளாண்மை ஆணையர் அல்லது அவரது பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் வகையில் முன் கூட்டியே தெரிவிக்க வேண்டும்.

12 நடப்பு ஆண்டில் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு விருது அடுத்து வரும் ஆண்டில் வழங்கப்படும்.

13 மாநில அளவில் பயிர் விளைச்சல் போட்டிக்கு தேர்வு செய்யப்பட்ட குழுவே சிறப்பு விருதுக்கான விவசாயியை தேர்வு செய்வதற்கும் பயன்படுத்தலாம்.

14 சிறப்பு விருதுக்கான விவசாயியை தேர்வு செய்யும் குழுவில் உள்ள உறுப்பினர்கள்

- i வேளாண்மை ஆணையர் அல்லது அவரது பிரதிநிதி
- ii மாவட்ட ஆட்சியர் அல்லது அவரது பிரதிநிதி
- iii வேளாண்மை இணைஇயக்குநர் அல்லது அவரது பிரதிநிதி.
- iv தேர்வு செய்யப்பட்ட மூன்று முன்னோடி விவசாயிகளில் ஒருவர் (வேளாண்மை ஆணையரால் நியமனம் செய்யப்பட வேண்டும்)

15 குறைந்த அளவு மூன்று குழு உறுப்பினர்கள் அறுவடையில் கலந்து கொள்ள வேண்டும்.

16 போட்டிக்கு தேர்வு செய்யப்பட்ட நிலம் சம்மந்தப்பட்ட வேளாண்மை உதவிஇயக்குநர் அவர்களால் மேற்பார்வையிடப்பட வேண்டும்.

17 சிறப்பு விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட விவசாயி வேளாண்மை ஆணையரால் அறிவிக்கப்பட வேண்டும்.

18 நெல், சோளம், பச்சை பயிறு, உளுந்து, பயிர்களுக்கான விளைச்சல் போட்டியில் பதிவு செய்த விவசாயி சிறப்பு விருதுக்கான போட்டியில் கலந்து கொள்ள இயலாது. இந்த நிபந்தனையில் எந்தவேறுபாடு காணப்பட்டாலும், அந்த விவசாயி அந்தவருடத்திற்கான பயிர் விளைச்சல் போட்டி மற்றும் சிறப்பு விருதுக்கான போட்டியில் கலந்து கொள்ள தகுதியற்றவர் ஆகிறார்

19 வேளாண்மை ஆணையரால் நியமிக்கப்பட்ட முன்னோடி விவசாயி சிறப்பு விருதுக்கான அறுவடையில் கலந்து கொள்வதற்கான பயணம் மேற்கொள்வதற்கு முதல்தர குழுவாக கருதப்படுவார்.

6) வேளாண்மை ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலினை செய்து, அதனை ஏற்று, நெல் (மானாவாரி), சாமை (மானாவாரி), சோளம் (மானாவாரி), சோளம் (இறவை), கேழ்வரகு (மானாவாரி), கேழ்வரகு (இறவை), துவரை (மானாவாரி), துவரை (இறவை), பச்சைப் பயறு (மானாவாரி) பச்சைப் பயறு (இறவை) உளுந்து (மானாவாரி), உளுந்து (இறவை) ஆகிய பயிர்களின் சாகுபடியில் அதிகமான மகசூல் பெறும் விவசாயிகளுக்கு மேலே பத்தி 5–லுள்ள வரையறைகளை பின்பற்றி பரிசு பெறும் விவசாயிகளை தேர்வு செய்து முதல் பரிசாக ரூ.50,000/– (ரூபாய். ஐம்பதாயிரம் மட்டும்) இரண்டாம் பரிசாக ரூ.25,000/– (ரூபாய். இருபத்தைந்தாயிரம் மட்டும்) மூன்றாம் பரிசாக ரூ.10,000/–மும் (ரூபாய். பத்தாயிரம் மட்டும்) வழங்க ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ரூபாயில்)

| வ. எண் | பயிர் | முதல் பரிசு | 2–ம் பரிசு | 3–ம் பரிசு |
|---|---|---|---|---|
| 1. | நெல் (மானாவாரி) | 50000 | 25000 | 10000 |
| 2. | சாமை (மானாவாரி) | 50000 | 25000 | 10000 |
| 3. | சோளம் (மானாவாரி) | 50000 | 25000 | 10000 |
| | சோளம் (இறவை) | 50000 | 25000 | 10000 |
| 4. | கேழ்வரகு (மானாவாரி) | 50000 | 25000 | 10000 |
| | கேழ்வரகு (இறவை) | 50000 | 25000 | 10000 |
| 5. | துவரை (மானாவாரி) | 50000 | 25000 | 10000 |
| | துவரை (இறவை) | 50000 | 25000 | 10000 |
| 6. | பச்சைப் பயறு (மானாவாரி) | 50000 | 25000 | 10000 |
| | பச்சைப் பயறு (இறவை) | 50000 | 25000 | 10000 |
| 7. | உளுந்து (மானாவாரி) | 50000 | 25000 | 10000 |
| | உளுந்து (இறவை) | 50000 | 25000 | 10000 |
| | மொத்தம் | 600000 | 300000 | 120000 |

மேலும், சிறப்பு விருதிற்கு திட்டமிடப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூ.10,20,000 மற்றும் பயணப்படிக்கு திட்டமிடப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூ.1,20,000 என இந்த விருதுகள் வழங்குவதற்கு ரூ.11,40,000/– (ரூபாய் பதினொரு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது.

7) இதன் மூலம் தமிழகத்தில் 36 விவசாயிகளுக்கு பரிசுப் பணம் வழங்கப்படும். இவ்வாறு பரிசு பெறும் விவசாயிகள் குறித்த விவரங்களை அரசுக்கு தெரிவிக்குமாறு வேளாண்மை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8) மேலே பத்தி 6– ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

“2401–00–பயிர் வளர்ப்பு–109–விரிவாக்கப்பணியும் உழவர் பயிற்சியும்–பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள்– II–மாநிலத் திட்டம்–KI– திருந்திய முறை நெல் பயிரிடுதலில் மிக அதிகமாக நெல் விளைச்சலை ஈட்டும் விவசாயிக்கு சிறப்பு விருது”

1) 04 பயணச் செலவுகள்–01–சுற்றுப் பயண படிகள்
(த.தொ.கு.2401–00–109–KI-0416) – ரூ.1,20,000/–
2) 59 பரிசுகளும் வெகுமதிகளும்
(த.தொ.கு.2401–00–109–KI-5902) – ரூ.10,20,000/–

மொத்தம் ரூ.11,40,000

9) மேலே பத்தி 6–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் புதுதுணைப் பணி (New Instrument of service) குறித்ததாகும். இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல்

நாளடைவில் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை பெறும் வரையில் இத்திட்டத்திற்கான ஆரம்ப செலவினம் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (contingency fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு செலவு பொது I) துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவைப்படும் முன்பணத் தொகையினை பெறுவதற்கு, வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளை இணைத்து நிதி (வரவு செலவு பொது I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு வேளாண்மை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினம் குறித்து சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு இவ்வாண்டின் துணை மதிப்பீட்டில் (Supplimentary Estimates) சேர்த்து இப்பணிக்கான மொத்த நிதி ஒதுக்கீடு, இந்த நிதி ஆண்டில் பணிகளின் செயலாக்கத்திற்காக தேவைப்படும் செலவினம் ஆகிய விவரங்களை உள்ளடக்கிய விளக்கக்குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி (வரவு செலவு பொது I) துறைக்கு அனுப்புமாறு வேளாண்மை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10) இவ்விருதுக்கு விண்ணப்பிக்கும் விவசாயிகளிடமிருந்து பெறப்படும் பதிவுக் கட்டணம் கீழ்க்கண்ட வரவின தலைப்பில் வரவு வைக்கப்பட வேண்டும். “0401-00-பயிர் வளர்ப்பு–800–இதர வரவினம்–AJ–பயிர் விளைச்சல் போட்டி(கு.தொ.கு.0401–00–800–AJ–009)”

11) இவ்வாணை நிதித் துறையின் ஒப்புதலுடன், அத்துறையின் அ.சா.எண்.41763/Agri/2012 நாள்.23.7.2012–ன்படி வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண். 769 (எழுநூற்று அறுபத்து ஒன்பது)

( ஆளுநரின் ஆணைப்படி)

சந்தீப் சக்சேனா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலர்

பெறுநர்
வேளாண்மை ஆணையர், சென்னை–5
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை–18 /பெயரில்
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை–8 (கிழக்கு)
சம்பளக்கணக்கு அலுவலர், மதுரை.
சம்மந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

<u>நகல்</u>
முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9
வேளாண்மைத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளரின் தனிச் செயலர், சென்னை–9
வேளாண்மை (பொது /வ&தி) துறை, சென்னை–9
பொதுத் துறை– சென்னை–9
நிதித்துறை (வேளாண்மை / வரவு செலவு பொது I & II) துறை,
இருப்பு கோப்பு / உதிரிகள்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

6/9/12
பிரிவு அலுவலர்
6/9/12

அரசாணை (நிலை) எண்.191, வேளாண்மைத்(வேஉ 2)துறை, நாள்.5.9.2012

**இணைப்பு**

நெல், சோளம், கேழ்வரகு, சாமை, துவரை, உளுந்து, பச்சை பயறு, அதிக உற்பத்தி திறன் பெறும் விவசாயிக்கு வழங்கப்படும் சிறப்பு விருது பெற பதிவு செய்வதற்கான விண்ணப்ப படிவம்.

1. விவசாயியின் பெயர்
2. தகப்பனார் பெயர்
3. முழு விலாசம்
   1) தேர்வு செய்யப்பட்ட நிலம் அமைந்துள்ள கிராமம்
   வருவாய் கிராமம்
   தாலுக்கா
   மாவட்டம்
   அஞ்சல் குறியீட்டு எண் (பின்கோடு)
   2) சர்வே எண். இதர விவரம்
   3) தேர்வு செய்யப்பட்ட நிலத்தின் பரப்பு (ஹெக்டேரில்)
4. குத்தகையானால், குத்தகைதாரரின் பெயர் மற்றும் விலாசம்
5. நில உரிமையாளர் பெயர் மற்றும் விலாசம்
   சாகுபடி விவரம்
6. பயிர்
7. ரகம்
8. விதைப்பு செய்த நாள்
9. நடவு செய்த நாள்
10. உத்தேச அறுவடை தேதி
11. பதிவு கட்டணம் ரசீது எண் மற்றும் நாள்

சான்று

1) போட்டியின் விதிமுறைகளை நன்கு அறிந்து கொண்டேன்
2) போட்டியின் வழிகாட்டுதல் மற்றும் விதிமுறைகளை நான் கடைபிடிப்பேன்.

போட்டியாளர் கையொப்பம்

பெயர்

நாள்

சந்தீப் சக்சேனா
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு செயலாளர்

// உண்மை நகல்//

6/9/12
பிரிவுஅலுவலர்
6/9/12